பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

47 ] சென்னை—ஞாயிறு, மார்ச்சு 2, 1947. [ விலை. அணா. 2

## துவேஷத்தை ஒழித்துவிடுக

காந்தியடிகள் பிப்ரவரி 22-ந் தேதி கமலாப்பூரில் நடத்திய பிரார்த்தனைக்கு சாந்த்பூருக்கு அருகிலுள்ள கிராமங்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். அதைப் பாராட்டி காந்தியடிகள் பேசியதாவது :—

" நீங்கள் சாந்த்பூரிலிருந்து வந்ததற்காக சந்தோஷம். வெயில் அதிகமாக இருக்கிறது. ஆனால் நீங்கள் இந்தியாவின் சூரியனைக் கண்டு அஞ்சமாட்டீர்களென்று நம்புகிறேன். அதுதான் நமக்கு கடவுளிடமிருந்து கிடைத்திருக்கும் அருட்பிரசாதங்களில் மிகவும் உயர்ந்ததாகும். நம்முடைய தேசத்தில் வருஷத்தில் பெரும்பாகம். வானம் தெளிவாக இருக்கிறது. இது இன்பம் தரும் விஷயமாகும்.

பாரததேவியின் மகத்தான புத்திரர் திரு. ஹரிதயால் நாக் உயிரோடு இருந்தபொழுது நான் பல முறை சாந்த்பூருக்கு போய் அவருடைய விருந்தாளியாக இருந்திருக்கிறேன். சாந்த்பூரி[illegible]ள்ள ஜனங்கள் அகதிகளுக்கு உதவிசெய்து வருவதைக் காண மிகுந்த சந்தோஷமாய் இருக்கிறது. ஆனால் நீங்கள் சுகாதார விதிகளை அலட்சியம் செய்வதைக் காண வருத்தமாய் இருக்கிறது. அந்த விதிகளின்படி நடந்தால் பிளேக் போன்ற தொத்து நோய்கள் வந்துவிடுமோ என்று சதாகாலமும் பயந்துகொண்டிருக்க வேண்டியதில்லை.

" நீங்கள் உங்களுடன் வசிக்கும் முஸ்லிம்களிடத்தில் கொஞ்சமும் துவேஷம் கொள்ளலாகாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமாதானமாக வாழ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இரண்டு வகுப்பாரும் துவேஷம் பாராட்டினால்தான் சண்டை சச்சரவு உண்டாகும். ஹிந்துக்களோ முஸ்லிம்களோ ஒரு வகுப்பார் துவேஷம் கொள்ளாது இருந்துவிட்டால் சச்சரவு ஏற்பட வழியில்லை. மனிதர்கள் தங்கள் எண்ணத்தின்படியே ஆகிறார்கள் என்று உபநிஷத்தில் ஒரு மகத்தான மந்திரம் இருக்கிறது. அதன் உண்மையை வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் காணலாம். ஆதலால் துவேஷ எண்ணத்தை துறந்துவிடுங்கள்."

## பெண்களுக்கு வேண்டுகோள்

காந்தியடிகள் 22-ந்தேதி காலையில் கமலாப்பூரிலிருந்து கிருஷ்ணப்பூருக்கு புறப்படுவதற்காக தாம் தங்கியிருந்த வீட்டு வாசலுக்கு வந்த பொழுது பெண்கள் அவருக்கு பழங்களும் புஷ்பங்களும் கொடுப்பதற்காக நின்றுகொண்டிருந்தார்கள். ஜாதி ஹிந்துக்களில் சிலர் தீண்டாமையை அனுஷ்டிப்பதை கண்டு வருந்திய காந்தியடிகள் அந்தப் பெண்களைப் பார்த்து. " நீங்கள் தீண்டாதவர் யாரையேனும் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். பெண்கள் பதில் சொல்லாமல் நின்று கொண்டிருந்தார்கள். அதன் மேல் காந்தியடிகள் " தீண்டாதவர்களில் நானே அதிகமாக தீண்டாதவன். நீங்கள் கொடுக்க விரும்புவதை பக்கத்தில் வந்து கொடுக்க வேண்டாம். எட்டி நின்றே கொடுங்கள்." என்று மிகுந்த துக்க உணர்ச்சியுடன் கூறினார்.

## தீண்டாமை ஒழிக

சார்சொலாடி என்னும் கிராமத்தில் பிப்ரவரி 23-ந் தேதி நடந்த பிரார்த்தனை கூட்டத்துக்கு ஆண்கள் பெண்கள் உள்பட சுமார் 4000 நாமசூத்திர (ஹரிஜன்) ஜாதியார் வந்திருந்தார்கள். அப்பொழுது காந்தியடிகள் கூறியதாவது :—

" அச்சுதர்கள் அதாவது ஹரிஜனங்களிடையில் இருப்பது எனக்கு பரம சந்தோஷமாய் இருக்கிறது. நான் அச்சுதர்களில் மிகத் தாழ்ந்த அச்சுதன் ஆவேன். எனக்கு ஜாதிகள் என்னும் ஏணியில் நம்பிக்கை கிடையாது. அந்த ஏணியில் நான் கீழே உள்ள கடைசிப்படியில் இருக்கிறேன். எல்லோரையும் அந்தப் படிக்கு வரும்படி அழைக்கிறேன். அப்படி எல்லோரும் வந்துவிட்டால் ஆலயப் பிரவேசம் கலப்பு விருந்துகள் தீண்டாமை விலக்கு போன்றவைகளுக்கு அவசியமில்லை. ஜாதிகாரணமாக எவ்வித தடையும் ஏற்படுத்தாவிட்டால் அன்றோடு தீண்டாமை அடியோடு ஒழிந்துபோகும் என்பதை நான் முற்றிலும் ஒப்புக்கொள்ளுகிறேன். தடையானது அசுத்தம் சம்பந்தமாகவே ஏற்படுத்த வேண்டும். அதுவும் விதிவிலக்கின்றி எல்லோருக்கும் ஏற்படுத்த வேண்டும். தீண்டாமை ஒழிப்பதற்கு முதலில் செய்யும்காரியம் ஆலயப்பிரவேசம். ஆயினும் இறுதியில் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டு தீண்டாமை அரக்கனை கொன்று தீர்த்துவிடுவார்கள் என்று நம்புகிறேன்."

## எல்லோருக்கும் சமமான கூலி

காந்தியடிகள் சார்சொலாடி யென்னும் கிராமத்தில் பிப்ரவரி 23-ந்தேதி பிரார்த்தனை பிரசங்கம் செய்தபொழுது கீழ்க் கண்ட கேள்வி கேட்கப்பட்டது :—

கேள்வி :—விவசாயியோ தோட்டியோ டாக்டரோ ஆசிரியரோ எஞ்சினியரோ எவரானாலும் சமூகத்துக்கு உபயோகமானதும் அவசியமானதுமான சேவையை செய்தால் அவர்களுக்கு சரிசமானமான கூலி கொடுக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? குழந்தைகளுடைய படிப்பு முதலிய செலவுகளை சர்க்கார் செய்ய வேண்டும். ஆனால் சொந்த அவசியத்திற்கு எல்லோருக்கும் சரிசமானமான கூலி கொடுக்க வேண்டியது அவசியமல்லவா? இந்தவிதமாக சமத்துவத்தை ஏற்படுத்திவிட்டால் தீண்டாமை அடியோடு ஒழிந்துவிடுமல்லவா ?

காந்தியடிகள் கூறிய பதில் :—உலகத்தார் எல்லோரும் பொறாமைப்படக்கூடிய விதமாக நம்முடைய தேசம் சுதந்திர வாழ்வை நடத்துமானால் அப்பொழுது தோட்டிகள் டாக்டர்கள் வக்கீல்கள்

ஆசிரியர்கள் வியாபாரிகள் எல்லோரும் சரிசமானமான கூலியே பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்திய சமுதாயம் இந்த லட்சியத்தை அடையாமல் போகலாம், ஆனால் இந்தியா தேசம் இன்பமாக வாழ வேண்டுமானால் இந்த லட்சியத்தை நாடுவதே இந்தியர் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

## இந்தியாவின் கடன் கணக்கு

இந்தியாவிற்கு இங்கிலாந்து கொடுக்க வேண்டிய கடனைப் பற்றி இந்திய சர்க்காரின் பிரதிநிதிகளுடனும் ரிசர்வ் பாங்க் பிரதிநிதிகளுடனும் பேசுவதற்காக இங்கிலீஷ் சர்க்கார் தூது கோஷ்டி ஒன்று சமீபத்தில் இந்தியாவுக்கு வந்திருந்தது. அதனால் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் ஏற்பட்ட கடன் விஷயத்தின் சரித்திரத்தை ஆராய்வது சுவை உடையதாகும். ஆங்கிலேயர் இந்தியாவை அடிமையாக்கிய காலம் முதல் பலவிதமான கடன்கள் இந்தியாவின்மீது சுமத்தப்பட்டு வந்தன. இப்பொழுது நடந்த யுத்த சமயத்தில் இந்தியாவானது இங்கிலாந்துக்கு பலவிதமான சாமான்களை கொடுத்து உதவியது அந்தச் சாமான்களின் மூலமாக இங்கிலாந்து இந்தியாவிடம் பெற்றது ரூ. 3,700 கோடி ரூபாய்க்கு அதிகமாகும். இங்கிலாந்து நமக்கு கொடுத்து வந்ததாக சொல்லும் கடன் 430 கோடியையும் இந்த யுத்தத்தின் செலவில் இந்தியா கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படும் தொகை 1700 கோடியையும் கழித்து விட்டால் நமக்கு சேரவேண்டியதாக உள்ள பாக்கி சுமார் 1600 கோடி ரூபாயாகும். இத்தொகையைப் பற்றி பேசுவதற்காகத்தான் தூது கோஷ்டியார் வந்திருந்தார்கள்.

பிறர் சொத்தை அபகரிக்க ஆசைப்படுகிறவர்கள் பலவிதமான தந்திரங்களை கையாள்வார்கள் :—

(1) பணமுடையவரை பயமுறுத்திப் பிடுங்குவார்கள்.

(2) வைத்திருக்கும்படி கொடுத்த பணத்தை கையாடி விடுவது அடுத்த முறை.

(3) கள்ளக் கணக்கு எழுதி செலவு தொகையை மறைத்து விடுவதும் தவறாக உபயோகித்த பணங்களைப் பற்றி சொந்தக்காரர்களுக்கு தெரியாமல் மறைத்து விடுவதும் ஒரு முறை.

(4) வேலைக்கு இருப்பவர் எஜமானுடைய பொருள்களை எடுத்து சொற்பப் பணத்திற்கு அடகு வைத்து விடுவது நாலாவது முறை.

(5) தர்மகர்த்தா தம்மிடம் ஒப்படைக்கப்பட் டிருக்கும் சொத்தை தம்முடைய சொந்தத்திற்கு உபயோகித்துக் கொள்வது.

பிரிட்டிஷார் இந்தியாவில் இந்த தவறான வழிகள் எல்லாவற்றையும கையாண்டிருக்கிறார்கள். இது தவிர சில விநோதமான வழிகளையும் சிருஷ்டித்திருக்கிறார்கள். கிளைவ் காலத்தில் பயமுறுத்திப் பிடுங்குவது சர்வ சாதாரணமாய் இருந்தது. பிளாஸி யுத்தத்துக்கும் வாட்டர்லு யுத்தத்திற்கும் இடையில் அதாவது சுமார் 50-வது வருஷ காலத்தில் பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து சுமார் 100 கோடி சவரங்கள் கொண்டு போய் இருக்கிறார்களென்று வில்லியம் டிக்பி என்னும் ஆங்கில அறிஞர் கணக்கிடுகிறார்.

கிழக்கு இந்தியக் கம்பெனியார் பயமுறுத்திப் பிடுங்கும் முறை அகௌரவமானதென்று, ஏமாற்றிக்கையாளும் முறையை அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். இந்தியாவில் வசூலாகும் வரிப் பணத்தை இந்திய மக்களுடைய நன்மைக்காக உபயோகிக்காமல் அந்தப் பணத்தைக் கொண்டு இந்தியாவின் சாமான்களை வாங்கி இங்கிலாந்துக்கு அனுப்பி லாபம் தேடி வந்தார்கள். அந்த விதமாக அவர்கள் 1793-வருஷத்துக்கும் 1812-வருஷத்துக்கு மிடையில் இந்தியாவிற்கு நஷ்டமான வரிப் பணம் 26 கோடி சவரங்களாகும்.

விக்டோரியா மகாராணி காலத்தில் பிரிட்டிஷார் கிளைவைப் போல் கொள்ளை யடிப்பதையும் கிழக்கு இந்தியக் கம்பெனியைப் போல் வரிப் பணத்தைக் கையாடுவதையும் அகௌரவமாக எண்ணினார்கள். ஆனால் அவர்களுக்கும் இந்தியாவின் பணத்தை விழுங்கி விட ஆசைதான். ஆனால் யோக்கியமாக நடந்து கொள்வது போல் காட்டிக் கொள்ள வேண்டுமென்று எண்ணினார்கள். ஆதலால் கணக்கை கள்ளக் கணக்காக செய்யும் முறையில் இறங்கினார்கள். ஆப்கானிய ஸ்தானம் பர்மா சைனா பாரசீகம் எகிப்து அபிசீனியா முதலிய இடங்களில் பிரிட்டிஷார் தங்கள் நன்மைக்காக போர் புரிந்தார்கள். அந்த யுத்தங்களுக்கும் இந்தியாவுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. ஆயினும் அவர்கள் அந்த யுத்தங்களின் செலவை இந்தியாவின் மீது சுமத்தி விட்டார்கள். அந்தத் தொகை 700 கோடி ரூபாயாகும். வெல்பி கமிஷன் அறிக்கையைப் பார்த்தால் இதுபோன்ற கள்ளக் கணக்குகள் ஏராளமாக காணலாம்.

பழைய காலத்தில் யூதர்களுக்குள்ளே ஒரு வழக்கம் இருந்து வந்தது. அது என்னவெனில் மகன் தன்னுடைய சொத்தை தாய் தந்தையர் உபயோகிக்கக்கூடாது என்று எண்ணினால் அதை அவன் நன்கொடை என்று சொல்லிக்கொண்டால் போதும் என்பதாகும். அந்த நிமிஷ முதல் தாய் தந்தையரை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு மகனுக்கு இல்லாமல் போய்விடும். கடமையைச் செய்யாமல் இருப்பதற்குஇது ஒரு தந்திரம். 20-ம் நூற்றாண்டில் ஜனங்கள் விழித்துக்கொள்ள ஆரம்பித்தபடியால் இங்கிலீஷ் அரசாங்கமும் இத்தகைய தந்திரங்களில் இறங்க வேண்டியதாயிற்று. முதல் யுத்தத்தில் இங்கிலாந்து தேசம் இந்தியாவில் பெரும் பணம் செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் இங்கிலீஷ் சர்க்கார் அந்தப் பணத்தைத் தர தயாராக இருக்கவில்லை. அதனால் அந்தத் தொகையை இந்தியா இங்கிலாந்துக்கு நன் கொடையாக கொடுப்பதாக இந்திய சர்க்காரை சொல்லும்படி செய்தார்கள். 1931-ம் வருஷத்தில் காங்கிரஸ் மகா சபை இந்தியாவிற்கும் இங்கிலாந்துக்கு மிடையில் ஏற்பட்டுள்ள கடன் விஷயத்தை ஆராய்வதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்கள். அதில் பம்பாய் சர்க்காரில் அட்வகேட் ஜெனரலாக வேலை பார்த்த இருவர் அங்கத்தினர்களாய் இருந்தார்கள். அந்தக் கமிட்டியார் இந்தியாவின் வரிப்பணத்திலிருந்து இங்கிலாந்துக்கு நன்கொடை கொடுக்க இந்திய சர்க்காருக்கு சட்டப்படி எவ்வித அதிகாரமும் கிடையாதென்று கூறினார்கள். ஆதலால் அந்த நன்கொடைகளெல்லாம் சட்ட விரோதமான காரியங்களேயாகும். ஆனால் தான் நினைத்தபடி பிரிட்டிஷ்சர்க்கார் செய்வதை எந்தச்சட்டம் அல்லது உத்திரவு கேட்க முடியும்? பிரிட்டிஷார் அணுகுண்டு சிருஷ்டிகர்த்தாவாகிய அமெரிக்கர்களோடு சேர்ந்து உலகத்தை பாதுகாக்கும் முதல் தரமான பலம் பொருந்தியவர்கள் அல்லவா? அதனால் அவர்கள் எந்தத் தவறும் செய்யமாட்டார்கள். எந்த சட்டமும் அவர்களை கட்டுப்படுத்தாது!

சென்ற யுத்தத்தில் இங்கிலாந்து இன்னும் ஒரு தந்திரத்தையும் கையாண்டது. யுத்தத்தை நடத்துவதற்காக அதற்கு அனேகவிதமான பொருள்கள் தேவையாயின. ஆனால் அந்தப் பொருள்களை வாங்க பணமில்லாமல் பாப்பர் நிலைமையில் இருந்து கொண்டிருந்தது. அதனால் இந்தியாவிலுள்ள பொருள்கள் மீது தன்னுடைய கண்ணோட்டத்தைச் செலுத்தியது. உடனே கோடிக்கணக்கான பணம்

பெறக்கூடிய உணவு தானியங்கள் முதலிய பல பொருள்களை எடுத்துக்கொண்டு நமக்கு கடன் பத்திரங்களை வழங்கியது. இதுவும் சட்ட ரீதியாகத் தோன்றும் ஒரு வஞ்சகச் செயலே யாகும்.

ஐ. ஸி. எஸ். (கலெக்டர்) உத்தியோகஸ்தர்களும் ஐ. பி. எஸ். (போலீஸ் சூப்ரெண்ட்) உத்தியோகஸ்தர்களும் இங்கிலீஷ் சர்க்காருடைய ஏஜெண்டுகளே யாவார்கள். கிளைவ் காலத்தில் கொள்ளையடித்ததற்கு ஒப்பாகவே இவர்களுக்கு பெரும் சம்பளங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு கொடுக்கும் தொகைகள் நம்முடைய தரித்திர நாட்டுக்கு கொஞ்சமும் பொருத்தமானதல்ல. அது போதாதென்று இப்பொழுது அவர்கள் 'தேசிய சர்க்காரிடம் வேலை பார்க்க முடியாது. நஷ்ட ஈடு கொடுங்கள்' என்று கேட்கிறார்கள். இங்கிலீஷ் சர்க்காரும் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தங்கள் ஏஜெண்டுகளாக இருந்தவர்களுக்கு தாங்கள் கொடுக்காமல் இந்தியாவைக் கொடுக்கும்படி சொல்லுகிறார்கள். சென்ற யுத்தத்தில் இந்தியாவானது கலந்துகொள்ள விரும்பவில்லை. ஆயினும் நம்முடைய ஜனங்களில் லட்சக்கணக்கான மக்களை போர்க்களத்திற்கு வலைபோட்டு பிடித்துக்கொண்டுபோனார்கள். இப்பொழுது அந்த வீரர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். அவர்களுக்குப் பரிசு அளிக்க வேண்டியது இந்தியாவா இங்கிலாந்தா? ஆனால்இங்கிலாந்தோ பலம் பொருந்திய தர்மகர்த்தா, அவருக்கு விரோதமாக பலமில்லாத இந்தியா என்ன செய்ய முடியும்?

இங்கிலாந்து நமக்கு கொடுக்க வேண்டிய பணத்தை தன்னால் உடனே கொடுக்க முடியாதென்றும் நீண்டகால தவணையாகவே கொடுக்க முடியுமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் பணத்தைக் கொடுக்க இங்கிலாந்துக்கு சக்தி உண்டு என்றே கூறுவேன். பிரிட்டிஷ் சர்க்காருடைய வருமானம் வருஷந்தோறும் 90 கோடி சவரங்களாகும். ஆதலால் நமக்கு கொடுக்க வேண்டிய 3700 கோடி ரூபாயை வெகு சுலபமாக கொடுத்துவிடலாம். அப்படி இருக்க நீண்டகாலத் தவணையில் கொடுப்பதாகச் சொல்லுவது கொஞ்சமும் பொருத்தமில்லை. "பணக்கார தேசம் பரம ஏழையான தேசத்திடம் கடனை குறைக்க வேண்டுமென்று கேட்பதும் நீண்ட கால தவணையில் கொடுக்கிறோம் என்று சொல்வதும் விநோதமான காரியமாயிருக்கிறது" என்று ஆங்கில பொருளாதார ஆசிரியர் கோல் என்பவர் கூறுகிறார்.

யுத்த காலத்தில் நம்மிடமிருந்து 3700 கோடி ரூபாய் கடன் வாங்கியது ரூபாயாகக் கடன் வாங்கவில்லை. சமான்களாகவே கொண்டுபோனார்கள். அதுவும் வைஸ்ராய் சர்வாதிகாரத்தைக் கொண்டு நிர்ப்பந்தப்படுத்தி வாங்கிக் கொண்டார்கள். அவர்கள் கொடுத்தவிலை மார்க்கெட் விலையைவிட குறைவாகும். அத்துடன் அவைகளை கொண்டு போவதற்காக உபயோகித்த ரயில்வேக்களின் தேய்மானத்திற்கு நஷ்டஈடு தர வேண்டாமா? அதுவும் தவிர அவர்கள் அவசியமான உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு போய் விட்டபடியால் உணவுப் பஞ்சத்தால் வங்காளத்தில் 1943-ம் வருஷத்தில் 30 லட்சம் பேர் உயிர் துறந்தார்கள்.

இது வரை கூறியதிலிருந்து இங்கிலாந்து தேசம் இந்தியாவிஷயத்தில் எவ்வளவு அகௌரவமான முறையில் நடந்து வந்திருக்கிறது என்பது தெளிவாகும். 1600 கோடி ரூபாய் பாக்கி என்று சொல்லுவது அவர்கள் போட்ட கணக்கு. ஆதலால் இந்தப் பணத்தைப் பற்றி முடிவு செய்வதற்கு முன்னால் பட்சபாதமற்ற நியாயசபையில் ஆராய வேண்டியது அவசியமாகும். இந்தக் கணக்குகள் கிளைவ் காலத்தில் ஆரம்பமானதாகும். இது வரை பொது ஜனங்களுக்குக் கணக்கு காட்டாமலே இருந்து வருகிறது. ஆதலால் இந்தியாவில் ஏற்படும் சுதந்திர சர்க்கார் இந்தக் கடன் பொறுப்பு விஷயமாக எதுவும் முடிவு செய்வதற்குமுன் அதை ஆராய்வதற்கு பட்சபாதமற்ற ஒரு நியாய சபையை நியமிக்க வேண்டும். 1931-ல் ஏற்பட்ட காங்கிரஸ் கமிட்டியும் அதைத்தான் சிபார்சு செய்தது. நியாய சபை ஆராய்ந்து இவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்று இறுதியாக முடிவு செய்தால் அந்தப் பணத்துக்கு இங்கிலாந்து சென்ற 20 வருஷ காலமாக இந்தியாவிலிருந்து கொண்டு போன தங்கத்தையும் இந்தியாவில் தனக்குள்ள சொத்துக்களையும் கொடுக்கலாம். நம்முடைய தேசத்தில் 450 கோடி ரூபாய் செலவில் பல நீர்ப் பாசன திட்டங்கள் வேலை செய்ய வேண்டியிருக்கின்றன. அவற்றிற்கு வேண்டிய மிஷின்களையும் இங்கிலாந்து அனுப்பிவைக்கலாம்.

எவ்வளவு பணம் இங்கிலாந்திடமிருந்து கிடைத்தாலும் அதை நாம் இந்தியாவிலுள்ள கிராமங்களின் நன்மைக்காகவே உபயோகிக்க வேண்டும். நகரங்களில் பிரமாண்டமான யந்திர சாலைகளை ஏற்படுத்துவதற்காக உபயோகியாமல் கிராம வாசிகளுக்கு வேண்டிய நீர்ப்பாசன திட்டங்களுக்காகவும் குடி தண்ணீருக்காகவும் வாய்க்கால்கள் வெட்டுவதற்காகவும் இவை போன்ற காரியங்களுக்காகவே உபயோகிக்க வேண்டும். இந்த விஷயங்களையும் அந்த நீதி சபையாருடைய தீர்மானத்திற்கு விட்டுவிடலாம்.

ஜே. ஸி. குமரப்பா.

## காந்தியடிகளின் புனித யாத்திரை

காந்தியடிகள் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் சமாதானமாக வாழும்படி செய்வதற்காக தம்முடைய புனித யாத்திரையை ஜனவரி மாதம் 2-ந் தேதி தாம் கொஞ்ச காலமாக தனியாக தங்கியிருந்த ஸ்ரீராம்பூரிலிருந்து ஆரம்பித்தார். சாந்திப்பூர் என்னும் கிராமத்தில் நான்கு நாட்கள் தங்கினார். அதன் பின் தொடர்ந்து யாத்திரை செய்து கொண்டிருக்கிறார். பிப்ரவரி 24-ந்தேதி ஹெய்ம்சார் என்னும் கிராமம் போய்ச் சேர்ந்தார். ஆகவே காந்தியடிகள் சுமார் 45 நாட்கள் 125 மைல் தூரம் நடந்திருக்கிறார். ஹெய்ம்சார் என்னும் கிராமத்தில் ஒரு வாரம் தங்கியிருப்பார் என்று தெரிகிறது. "தொடர்ந்து நடக்க எனக்கு ஆசைதான் ஆனால் உடம்பு ஓய்வு கேட்பதால் அதற்கு அதை கொடுக்க வேண்டியவனாய் இருக்கிறேன்" என்று காந்தியடிகள் கூறுகிறார்.

## கஸ்தூரிபா வருஷாப்திக தினம்

கஸ்தூரிபா வருஷாப்திக தினம் பிப்ரவரி 19-ந்தேதி வந்தது. அன்று காந்தியடிகள் நார்துர்கியா என்னும் கிராமத்தில் ஒரு மீன் பிடிப்பவருடைய குடிசையில் தங்கியிருந்தார். அவர் இருந்த அறையில் கஸ்தூரிபாயின் படத்தை வைத்து புஷ்பங்களைக் கொண்டு அலங்காரம் செய்தார்கள். காந்தியடிகள் பேசாமல் கட்டிலில் உட்கார்ந்திருந்தார். 'கஸ்தூரிபா நம்மை விட்டுப் பிரிந்து மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன,' என்று மட்டுமே சொன்னார். காந்தியடிகளின் பேத்தி திருமதி மனு காந்தி பகவத் கீதையிலிருந்து சில சுலோகங்களை பாடினார். அதன்பின் அங்கு கூடியிருந்தவர்கள் ராம்துன் பாடினார்கள். அத்துடன் அந்த வைபவம் முடிவடைந்தது.

தீயவை விட்டு தூயவை தொட்டனை தெளிவடைந்தாய் மகனே—நாமக்கல் கவிஞர்.

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மார்ச்சு 2, ஞாயிறு 1947


## ஜாதி ஒழிக

காந்தியடிகள் கமலாப்பூர் என்னும் கிராமத்தில் பிப்ரவரி 21-ந் தேதி பிரார்த்தனை பிரசங்கம் செய்தபொழுது சில கேள்விகள் கேட்கப்பட்டன. அந்தக் கேள்விகளும் அவர் கூறிய பதில்களும் வருமாறு :—

கேள்வி :—ஜாதி ஒழியவேண்டு மென்று கூறுகிறீர்கள். அப்படியானல் ஹிந்துமதம் அழிந்துவிடு மல்லவா? கிருஸ்துவமதம், இஸ்லாம்மதம் போன்ற முன்னேற்றமான மதங்களுடன் ஹிந்துமதத்தை சேர்த்துப் பேசலாமா ?

பதில் :—ஹிந்துமதம் அழியாமல் இருக்கவேண்டுமானல் இப்பொழுது நாம் வைத்துக்கொண்டிருக்கும் ஜாதிகளெல்லாம் ஒழிந்து தீரவேண்டியது அவசியமாகும். கிருஸ்துவமதமும் இஸ்லாம் மதமும் முன்னேற்றமான மதங்கள் என்றும் ஹிந்து மதம் முன்னேற்றம் இல்லாத மதமென்றும் கூறுவதை நான் நம்பவில்லை. எந்த மதத்திலுமே சரியான முன்னேற்றம் காணப்படுவதாக தெரியவில்லை. உலகத்திலுள்ள மதங்கள் முன்னேற்ற முடையதாக இருந்தால் உலகத்தில் இப்பொழுது காணப்படும் சண்டையும் சச்சரவும் உண்டாகி யிருக்கமாட்டா. வருணங்களை கடமையாக அனுஷ்டித்தால் அதற்கு எல்லா மதங்களிலும் இடமுண்டு. முஸ்லீம் மௌல்வியோ கிருஸ்துவ பாதிரியாரோ தம்முடைய ஜனங்களுக்கு பண நோக்கத்துடனின்றி தம்முடைய திறமையை பிறருக்காக உபயோகிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே போதனை செய்வார்களானல் அவர்களும் பிராமண வருணத்தவர்களே ஆவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதுபோல்தான் மற்ற வர்ணங்கள் விஷயமும் ஆகும்.

கேள்வி :—தாங்கள் ஜாதியை ஒழித்துவிடவேண்டு மென்று கூறுவதால் கலப்பு மணத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

பதில் :—ஆம் நிச்சயமாக ஆதரிக்கிறேன்.

கேள்வி :—அனேக தொழில்களை சில ஜாதியாரே ஏகபோகமாக செய்து வருகிருர்கள். இதையும் ஒழித்துவிடவேண்டு மல்லவா ?

பதில் :—ஜாதிகள் ஒழிந்துபோனல் இந்தக் கேள்விக்கு இடமில்லை. இன்ன தொழில் இன்ன ஜாதிக்கு சொந்தமென்பதும் ஒழிந்துபோகும்.

கேள்வி :—ஒரே ஒரு கடவுள்தான் இருக்கிருர் என்று சொன்னல் ஒரேஒரு மதந்தானே இருக்க வேண்டும் ?

பதில் :—இது ஒரு விநோதமான கேள்வி. மரத்தில் லட்சக்கணக்கான இலைகள் இருக்கின்றன. அதுபோல் கடவுள் ஒருவரே யானலும் மனிதர்கள் பலராய் இருப்பதால் மதங்களும் பலவாக இருக்கின்றன. நாம் வேறு வேறு மதங்களை அனுஷ்டிப்பதால் இந்த தெளிவான உண்மையை அறியாமல் இருந்து வருகிறோம். நான் ஹிந்துதான். ஆயினும் மற்ற ஹிந்துக்களைப்போலவே நானும் கடவுளை வணங்குவதாக சொல்ல முடியாது.

## நம்முடைய பொருளாதாரக் கொள்கை

பொது ஜன மந்திரி சபைகள் ஏற்பட்டிருப்பதால் அந்த மந்திரி சபைகள் எவ்வித திட்டங்களை அனுசரிக்க வேண்டும் என்பதைப் பற்றி ஜனங்கள் சிந்திக்க ஆரம்பித்திருக்கிருர்கள். சென்னையில் துணி மில்களை நிறுத்த வேண்டும் என்ற கொள்கையைப் பற்றி ஜனங்களுடைய மனதில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. சம்பந்தமாக நாம் கவனிக்க வேண்டிய கேள்வி ஒரே இடத்தில் ஏராளமாக செய்து குவிக்கக் கூடிய பெரிய கைத்தொழில்களை ஏற்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்பதேயாகும்.

ஏகாதிபத்தியம் என்பது இத்தகையகை த்தொழில்களின் விளைவே என்பதையும் இத்தகைய கைத்தொழில்கள் ஏகாதிபத்தியத்தின் ஆதரவு இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாது என்பதையும் ஜனங்கள் இன்னும் தெளிவாக அறிந்து கொள்ளவில்லை.

இங்கிலாந்து தேசம் இத்தகைய கைத்தொழில்களை ஏற்படுத்திய காலத்தில் அது ஒரு ஏகாதிபத்தியமாக இருக்கவில்லை. அங்கே பல இடங்களில் பொருள்களைச் செய்யும் பொருளாதார முறையே நடந்து வந்தது, அந்தக் காலத்தில் இங்கிலாந்து தேசம் உயர்ந்த பண்பாடு உடையதாகவும் ஒழுக்கத்தில் மேம்பாடு பெற்றதாகவும் இருந்தது. மனித சமூகத்திற்கு பெரிய சேவைகள் இங்கிலாந்து செய்ததெல்லாம் மில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கு முன்னல்தான். இங்கிலாந்தின் இலக்கியத்தில் தலைசிறந்தது அந்தக்காலத்தில்தான் உண்டாயிற்று. அதுபோலவே ஓவியத்திலும் சிற்பத்திலும் சிறந்து விளங்கியது எலிஸபெத்து மகாராணி காலத்தில்தான் ஷேக்ஸ்பியர் மில்டன் போன்ற கவிஞர்களும் ரெயினல்ட்ஸ் போன்ற ஓவியர்களும் ரென் போன்ற சிற்பர்களும் வாழ்ந்து வந்தார்கள். பிரிட்டிஷ் சத்தியாக்கிரகிகள் என்று சொல்லத் தகுந்த லாட்ரிமர் போன்ற பெரியார்களும் அப்பொழுது தான் வாழ்ந்திருந்தார்கள். அவர்களெல்லோருக்கும் மில் என்ருல் என்னவென்பது தெரியாது. விக்டோரியா மகாராணி காலத்தில் இங்கிலாந்து செல்வத்தில் புரண்டு கொண்டிருந்தது உண்மைதான். ஆனல் பண்பாட்டு விஷயத்தில் அப்பொழுது இருந்த தாழ்ந்த நிலைமை வேறு எந்தக் காலத்திலும் ஏற்பட்டதில்லை. மில் தொழிலை ஏற்படுத்தியபின் இங்கிலாந்து தேசம் உலக முழுவதையும் பெற்ற போதிலும் தன்னுடைய ஆன்மாவை இழந்து விட்டது. இதன் காரண மென்ன?

இங்கிலாந்து தேசம் துணி மில் ஏற்படுத்தியபொழுது அதற்கு வேண்டிய பருத்தி அமெரிக்காவி லிருந்து வந்துகொண் டிருந்தது. ஆனல் அமெரிக்காவில் உள் நாட்டு யுத்தம் ஏற்பட்ட பொழுது அங்கிருந்து பருத்தி இங்கிலாந்துக்கு வந்து சேர முடியாம லிருந்தது. ஆதலால் பருத்தி உற்பத்தி தன்னுடைய ஆதிக்கத்தில் இருந்தால்தான் தன்னுடைய மில்கள் உயிரோடு இருக்க முடியும் என்பதை இங்கிலாந்து அறிந்து கொண்டது. ஆதலால் பருத்தியை உண்டாக்கவும் பருத்தி துணிகளை விற்கவும் இந்தியாவை உபயோகிக்க ஆரம்பித்தது. இதுதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிறப்பு வரலாறாகும்.

இங்கிலாந்திலுள்ள மில் முதலாளிகள் தங்களுக்கு ஏற்படும் பல செலவுகளை இந்திய வரிப் பணத்திலிருந்து செய்யுமாறு செய்து வந்தார்கள். இந்தியாவில் நீண்ட இழைப் பஞ்சு உற்பத்தி, இங்கிலீஷ் சரக்குகளுக்கு குறைந்த ரயில்வே கட்டணம் போன்ற வசதிகளை இந்தியச் சர்க்கார் செய்து கொடுத்தார்கள். ஆனல் அவர்கள் உற்பத்தி செய்த துணியின் அடக்க விலை மிகக் குறைவாக இருந்தது.

கடமை செய்யும் உரிமையே உயிர் வாழும் உரிமையாகு — காந்திஜி.

மில் உற்பத்தி திறமையாக நடக்க வேண்டுமானல் இந்த விதமாக விளை பொருள்களையும் மார்க்கெட்டுகளையும் கைவசப்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும். இந்த வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள அரசாங்க அதிகாரம் பெறவேண்டியது அவசியமாகும். இந்தக் காலத்தில் அரசாங்க அதிகாரம் பெறுவது பலாத்கார முறையினல் தான் சாத்தியமாகும். அதற்காக சேனையும் கடற் படையும் ஆகாயப் படையும் தேவையாகும். அதன் காரணமாக அடிக்கடி யுத்தங்கள் ஏற்படுவது அவசியமாகும். ஜப்பான் தன்னுடைய கைத் தொழில் அபிவிருத்திக்காக மஞ்சூரியாவையும் சைனவையும் அடக்கி ஆள விரும்பியதை எல்லோரும் அறிவர். இந்த மாதிரி காரியங்களில் நம்முடைய தேசமும் ஈடுபட வேண்டுமா? வேண்டாமென்றல் நாம் சொந்த லாபத்திற்காக பொருள்களைச் செய்து குவிக்கும் மில் தொழில் முறையை விட்டுவிட வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவிலிருந்து பருத்தியைத் தருவிக்கவும் இங்கிலாந்துக்கு வேண்டிய பருத்தியை உற்பத்தி செய்ய இந்தியாவில் இந்திய வரிப் பணத்தைக் கொண்டு ஆராய்ச்சி செய்யவும் ஏற்பாடு செய்த பிறகு இங்கிலாந்து தேசம் இந்தியாவிலிருந்து பருத்தியை கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்காக நம்முடைய நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அவசிய மென்று கூறிக் கொண்டு நம்முடைய வரிப் பணத்தைக் கொண்டு ரயில் ரோடுகள் போட ஆரம்பித்தது. அதற்காக கோடிக் கணக்கான பணத்தை இந்திய சர்க்கார் செலவு செய்தது. ஆனல் இந்தியாவுக்கு அந்தச் சமயத்தில் அதிகம் தேவையாய் இருந்தது உள் நாட்டு கப்பல் போக்கு வரத்து வசதிகளே யாகும். ஆனல் ஆங்கிலேயர் நம்முடைய நன்மையை எண்ணுவார்களா ?

இப்படி ஏராளமாக செலவு செய்தார்களே அந்தப் பணத்தை இங்கிலாந்திலுள்ள மில் முதலாளிகள் கொடுப்பதே நியாயம். ஆனல் அவர்கள் அந்தப் பணத்தைச் செலவு செய்திருந்தால் தங்கள் துணியை இந்தியாவில் கையால் நூற்று கையால் நெய்யும் துணியை விட குறைந்த விலைக்கு விற்க முடியாது. இப்படித் தான் செலவு செய்ய வேண்டியதை இந்திய சர்க்காரை செலவு செய்யச் செய்து துணியின் அடக்க விலையை குறைத்துக் கொண்டது. இது சாமர்த்திய மல்ல, கொள்ளையே யாகும். ஆகவே விளை பொருள்களுக்காக ஏகாதிபத்தியம் தேவை. விலையைக் குறைப்பதற்காக பிறரைக் கெடுத்து வாழும் அயோக்கியத்தனம் தேவை.

ஒரு உதாரணம்:—நான் பல்லடம் தாலுகாவிற்கு போய் இருந்தேன். அங்கே ஒருவர் ஆயில் என்ஜின் வைத்து ஆறுதறிகளை ஓட்டிக் கொண்டிருக்கிறர். அதற்காக 25 ஆயிரம் ரூபாய் செலவுசெய்து இருக்கிறர். ஆயினும் மாதத்தில் 18 நாட்களுக்கு நெய்யக்கூடிய நூலே அவருக்கு கோயமுத்தூரிலிருந்து கிடைக்கிறது. இதுபோல் இன்னும் பாதிநூல் அதிகமாககிடைக்குமானல் மாசம் முழுவதும் நெய்ய முடியுமென்றும் துணியை மில் விலையைவிடகுறைவான விலைக்கு விற்கமுடியு மென்றும் என்னிடம் சொன்னர். அவருக்கு வேண்டிய நூற் பாவுகள் கோயமுத்தூரிலிருந்து வருகின்றன. அவருடைய துணிகள்நெல்லூருக்கு பக்கத்தில் விற்பனையாகின்றன. இதன் முடிவு என்ன ஆகுமென்றல் இவர் தமக்கு வேண்டிய நூலுக்காக கோயமுத்தூர் மில் முதலாளிகள் மீது ஆதிக்கம் செலுத்தவேண்டியது அவசியமாகும். போக்கிரியை விட்டு நூலை வாங்கிக் கொண்டு வரும்படி செய்தால் இவருடைய தறிகள் வெகு திறமையாக வேலை செய்யும். நெல்லூருக்கு குறைந்த செலவில் துணியை அனுப்ப முடியுமானல் இவர் மில்துணியின் விலையைவிட குறைந்த விலைக்கு விற்கமுடியும். இதுதான் மில் தொழிலின் நிலைமையாகும். அதற்காக ஏகாதிபத்தியமும் சுரண்டுதலும் இன்றியமையாததாகும்.

மில்களுக்கு வேண்டிய விளைபொருள்களை உண்டாக்குவதற்காக பொதுப் பணத்தைக்கொண்டு விவசாய கலாசாலைகளை ஆராய்ச்சி செய்ய சொல்வதோடு நிற்கவில்லை. உணவுப் பொருள்கள் விளைந்து வந்த நிலங்களை மில்களுக்கு வேண்டிய விளைபொருள்களை உண்டாக்குவதற்கு உபயோகித்து வருகிறர்கள். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்திற்கு இதுவும் ஒரு காரணமாகும். மலையாளத்தில் பையனூர் பிர்க்காவிற்கு போய் இருந்தேன். பல கிராமங்களில் நெல் விளைந்த நிலங்களில் ஐந்தில் ஒரு பகுதியில் இப்பொழுது தென்னையைப் பயிர் செய்கிறர்கள். அப்படிச் செய்வது உணவு உண்டாக்கும் நோக்கத்தோடு அன்று. சோப்பு உண்டாக்கும் ஆயில் மில்களுக்கு கொப்பரைத் தேங்காய் கொடுப்பதற்காகவே. ஆகவே நெல் விளையும் நிலங்களை சோப்பு உற்பத்திசெய்யும்படி செய்துவிட்டார்கள். இப்படிச் செய்தால் அடிக்கடி உணவுப் பஞ்சம் எப்படி ஏற்படாமலிருக்க முடியும்?

மலையாளத்தில் குழந்தைகளுடைய தலை ரோமம் கறுப்பா யில்லாமல் பழுப்பா யிருக்கக் கண்டேன். அதன் காரணத்தைக் கேட்டேன். இந்தக் குழந்தைகள் முன்னல் தேங்காய் எண்ணெய் போதுமான அளவு தேய்த்து வந்தார்கள். இப்பொழுது அங்கே தேங்காய் சென்னையில் விற்பதுபோலவே அதிக விலைக்கு விற்கிறது. அதனல் குழந்தைகளுக்கு தொட்டுத் தடவக்கூட தேங்காய் எண்ணெய் கிடைப்பதில்லை. இந்தவிதமாக பெரிய கைத்தொழில்கள் ஜனங்களுடைய வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்களை உண்டாக வொட்டாமலும் கிடைக்க வொட்டாமலும் செய்து ஜனங்களை பட்டினி போடவும் நோய் பெறவும் செய்து வருகின்றன.

பணத்தைக் கொண்டு காரியங்கள் செய்து வருவதால் கஷ்டப் படுகிறவர்களுக்கு கஷ்டத்தின் காரணம் இதுவென்று தெரிவதில்லை. மனித வாழ்வுக்கு இன்றி யமையாத பொருள்களுக்கு விலை போடுவதற்கு பணம் தகுந்த முறையல்ல. ஒரு உதாரணம்:— அவனசி தாலுகாவில் ஏராளமாக பாலை உற்பத்தி செய்து கோயமுத்தூருக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். பாலின் மதிப்பு பணமல்ல, அது கொடுக்கும் போஷணையே யாகும். ஆதலால் பால் உற்பத்தி செய்கிறவர் அதை தம்முடைய குழந்தைக்குக் கொடுத்தால் குழந்தையினுடைய எலும்பு வளர்ச்சிக்கு வேண்டிய சுண்ணும்புச் சத்துக் கிடைக்கும். பாலிலுள்ள கொழுப்பு முதலிய போஷணை வஸ்துக்கள் குழந்தையின் உடம்பை நன்றக வளர்க்கும். பால் உற்பத்தி செய்கிறவருடைய குழந்தை குடித்தாலும் சரி மில் முதலாளி குடித்தாலும் சரி அதனுடைய போஷணையைக் கவனித்தால் பாலின் மதிப்பு ஒரே விதமாகவே இருக்கும். அதுமட்டுமன்று. வளர்ந்த மனிதனுக்கு கொடுப்பதைவிட வளரும் குழந்தைக்கு கொடுத்தால் பாலின் மதிப்பு அதிகமாய் இருக்கும் என்றுகூடச் சொல்லலாம். ஆனல் கோயமுத்தூர் மில் முதலாளி ஒரு பவுண்ட் பாலுக்கு எட்டணு கொடுக்கக் கூடியவராய் இருப்பதால் அவனசியில் பாலை உற்பத்தி செய்கிறவர் போஷணைதரும் இந்த உணவை தம்முடைய குழந்தைக்குக் கொடுக்காமல் கோயமுத்தூருக்கு அனுப்பிவிடுகிறர். இப்படிச் செய்வதின் காரணமாக குழந்தையின் ஆரோக்கியத்தை விற்றுவிடுகிறேம் என்பதை அவர் உணர்வது இல்லை. ஆதலால் கிராம வாசிகளுடைய வாழ்வை அபிவிருத்தி செய்ய விரும்பினல் மில் தொழிலையும் பணமதிப்பையும் விட்டுவிட

வேண்டும். வியாபாரம் செய்தால் என்ன விலை கிடைக்கும் என்று எண்ணுமல் ஜனங்களுடைய நன்மையையே எண்ண வேண்டும்.

ஒரு இடத்தில் பொருள்களை செய்து குவிக்கும் உற்பத்தி முறையானது ஒரு சிலரிடத்தில் செல்வம் வந்து குவிந்துவிடும்படியாகச் செய்கிறது. பரம ஏழையான இந்தியா தேசத்தில் செல்வம் சிலர் கையில் சேர்வதை நாம் விரும்பவில்லை. செல்வம் எல்லோருக்கும் கிடைக்கும்படியாக செய்வதையே விரும்புகிறோம். பிரித்துப் பிரித்து தொழில் செய்வதின் மூலம் செல்வத்தை எல்லோர்க்கும் கிடைக்கும்படி செய்யலாம். இந்தியாவில் வேலை செய்யக் கூடியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பைக்கொண்டு நமக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். குயவர் உபயோகமில்லாத களிமண்ணை எடுத்து தம்முடைய சாமர்த்தியத்திலும் உழைப்பிலும் ஜனங்கள் உபயோகிக்கக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்து செல்வத்தை சிருஷ்டி செய்து விடுகிறார். இந்த முறைதான் இந்தியாவிற்கு ஏற்ற முறையாகும்.

மில் தொழில்களே வேண்டாமென்று கூறுவதாக எண்ண வேண்டாம். மில் தொழில்களை தனி நபர்கள் நடத்தினால் மேற்கூறிய தீமைகளெல்லாம் உண்டாகவே செய்யும். ஆனால் ரயில்வே மின்ஸாரம் போன்ற கைத்தொழில்களை சர்க்காரே லாபத்துக்காக இல்லாமல் ஜனங்களுடைய நன்மைக்காக நடத்த வேண்டும். அதுபோலவே ஜனங்களுக்கு வேண்டிய குடி தண்ணீர் திட்டம் உலோக பொருள்கள் எடுத்தல் இரும்பு முதலிய பெரிய கைத்தொழில்கள் [illegible]வைகளை சர்க்காரே நடத்த வேண்டும். [illegible]ர்காருடைய ஆதிக்கத்துக்கு உபட்டு நட[illegible] வேண்டும். ஆனால் தினசரி வாழ்க்கை[illegible]ருள்களை மில்தொழில் மூலம் செய[illegible]ல் தொழில்களையும் தனிநபர் [illegible]ர்கார்தான் நடத்த வேண்டும்.

ஆகலால் சென்னை சர்க்காருடைய [illegible]கொள்கையானது இந்தியாவை ஏகாதிபத்தியச் சுழலில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கும்படி செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டதாகும். நம்முடைய வாழ்நாளிலேயே ஜப்பான்கூட மில்தொழில் உற்பத்திமுறையை கையாள ஆரம்பித்ததால் ஏகாதிபத்திய சுழலில் அகப்பட்டுக்கொண்டதை நாம் நேரில் கண்டுவிட்டோம். மற்ற மாகாணங்கள் வேறுவிதமாக நடக்கிறதென்று எண்ணி நமக்குச் சரி என்று தோன்றிய கொள்கையை விட்டுவிடலாகாது. மில்தொழில் உற்பத்திமுறை மனிதனிடத்தில் பேராசையை உண்டாக்கி அவனுடைய ஆன்ம வளர்ச்சியை கெடுத்துவிடுவதால் அதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளும் காரியத்தை யாரும் ஆட்சேபிக்க முடியாது. சென்னை மாகாணம் இது விஷயத்தில் வழிகாட்டக் கொடுத்து வைத்தது அதற்கு ஒரு பெரிய கௌரவமாகும்.

சென்னை மந்திரி சபையார் தாங்கள் வகுத்துள்ள திட்டத்தை நிறைவேற்றினால் அவர்கள் சுயமரியாதை அஹிம்சை நாணயம் சொந்தத் தேவையை தாமே பூர்த்தி செய்து கொள்ளுதல் போன்ற விஷயங்களில் இந்தியர்வுக்கு மட்டுமின்றி மில்தொழில் உற்பத்தி முறையால் பாழ்பட்டுக் கிடக்கும் உலகம் முழுவதற்கும் வழிகாட்டியவர்கள் ஆவார்கள்.

மில்தொழில் உற்பத்தி முறையை பொருளாதார விஷயத்தில் அனுஷ்டித்து வந்தால் அது இறுதியில் ஜனநாயகத்தில் கொண்டு சேர்க்காமல் சர்வாதிகாரத்திலேயே கொண்டு சேர்க்குமென்று ஆச்சார்ய கிருபளாணி தம்முடைய மீரத் காங்கிரஸ் தலைமை உரையில் கூறியிருக்கிறார். ஆகவே ஜனநாயகப் பயிற்சிவேண்டுமானால் மில்தொழில் முறையை விட்டு விடவேண்டும். ஓரிடத்தில் குவிக்கும் முறையானது அதிகாரத்தை ஒருவர் கையில் சிக்கும்படி செய்து ஜனநாயகத்தை கொன்றுவிடும்.

ஜே. ஸி. குமரப்பா.

## வெளியேற வேண்டியது அவசியமா?

காந்தியடிகள் பிஷத்தலை என்னும் கிராமத்தில் பிப்ரவரி 20-ந்தேதி செய்த பிரார்த்தனை பிரசங்கத்தில் கூறியதாவது :—

"இங்குள்ள ஹிந்துக்கள் இங்கிருந்து அயல் இடங்களுக்கு போய்விட வேண்டுமானால் அவர்கள் தங்களுடன் கொண்டு போக முடியாத ஜங்கம சொத்துக்களுக்கும் ஸ்தாவர சொத்துக்களுக்கும் வங்காள சர்க்கார் நஷ்டஈடு கொடுக்க வேண்டும். தொழிலை இழந்து போவதற்கு நஷ்டஈடு கொடுக்கும் விஷயம் சுலபமாக முடிவு செய்யக் கூடியதாக இல்லை. அந்த நஷ்டஈட்டுச் சுமையை எந்த சர்க்காரும் ஏற்றுக்கொள்ள முடியுமென்று தோன்றவில்லை. ஆனால் இங்கிருந்து போகிறவர்கள் குடியேறுமிடத்தில் புதிதாக தொழில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நியாயமான ஒரு தொகையைக் கேட்டால் கொடுக்க வேண்டியது அவசியம் என்றே கருதுகிறேன். ஜனங்கள் இங்கிருந்து வெளியேறலாம் என்பதை நான் ஒத்துக் கொண்ட போதிலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமாதானமாக வாழத் தெரிந்தவர்கள் தான் என்று என்னுடைய அனுபவம் கூறுகிறது. அவர்கள் தலைமுறை தலைமுறையாக சமாதானமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். பகுத்தறிவு வேண்டாமென்று துறந்து விட்டாலன்றி அவர்கள் சமாதானமாக வாழ முடியாதென்பதை நான் எண்ணிக்கூட பார்க்க முடியாது. இமயமலையின் சாரலில் வாழ்ந்து கங்கை ந[illegible]லத்தை குடித்து ஆயிரக்கணக்கான வருஷங்[illegible]ஒன்றாக வாழ்ந்து வந்த ஹிந்துக்களும் முஸ்லீம்களும் உலகத்துக்கு ஒரு அபூர்வமான செய்தியை தெரிவிக்கக் கூடியவர்களாய் இருக்கிறார்கள் என்று முஸ்லீம் கவியரசர் இக்பால் கூறியதை நான் முழுவதும் நம்புகிறேன்.

அஹிம்ஸாவாதி ஹிந்துக்களையும் முஸ்லீம்களையும் சமாதானமாக வாழும்படி செய்ய முடியவில்லை என்று தோல்வியை ஏற்றுக்கொண்டு ஹிந்துக்கள் வெளியேறலாம் என்று கூறுவது சரியாகுமா என சிலர் கேட்கிறார்கள். அஹிம்ஸாவாதி நஷ்டஈடு கேட்கமாட்டார். நவகாளியிலுள்ள ஹிந்துக்கள் கள்ளங்கபடமற்ற மக்கள், அவர்கள் சமாதானமாகவும் பயமில்லாமலும் வாழப் பிரியப்படுகிறார்கள். சர்க்கார் பெரும்பான்மையோரான முஸ்லீம்கள் சமாதானமாய் வாழ்வதற்காக நஷ்டஈடு கௌரவமான முறையில் கொடுக்க முன் வந்தால் ஹிந்துக்கள் அதை ஏற்றுக் கொள்ளுவார்களென்றே நம்புகிறேன். ஹிந்துக்கள் இருப்பது பெரும்பான்மையோரான முஸ்லீம்களுக்கு எரிச்சல் உண்டாக்குமானால் சர்க்கார் ஹிந்துக்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டியது கடமையாகும். இது போலவே ஹிந்துக்கள் பெரும்பான்மையோராக உள்ள மாகாணத்திலுள்ள சர்க்காரும் அங்குள்ள முஸ்லீம்களுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப் பட்டவர்களாவார்கள்."

## கேள்வியும் பதிலும்

கேள்வி :—ரவீந்திரநாத் போன்ற கவி சிரேஷ்டர்களையும் ராமன் போன்ற விஞ்ஞான நிபுணர்களையும் சரீர வேலைசெய்து தங்கள் உணவை தேடிக்

கொள்ள வேண்டுமென்று கூறுவது நியாயமாகுமா? அது அவர்களுடைய சக்திகளை பாழாக்குவதாக ஆகு மல்லவா? சரீர உழைப்பாளிகளைப் போலவே மூளை உழைப்பாளிகளும் உபயோகமான சமூக சேவை செய்கிருர்களல்லவா? அதனுல் சரீர உழைப்பாளி களைப் போலவே மூளை உழைப்பாளிகளைக் கருத வேண்டுமல்லவா?

பதில்:—மூளை வேலை முக்கியமானதுதான், வாழ் வுக்கு அவசியமானதுதான். ஆனுல் நான் வற்புறுத் துவதெல்லாம் சரீர வேலையின் அவசியமே யாகும். எந்த மனிதனும் சரீரவேலை செய்யாமல் இருக்கக் கூடாது என்றே நான் கூறுகிறேன். சரீரவேலை செய்தால் மூளைவேலை திறம்பட நடைபெறு மென்று கூட நான் கூறுவேன். பண்டைக்காலத்தில் பிராம ணர்கள் மூளையைக் கோண்டு உழைத்தது போலவே உடம்பைக் கொண்டும் உழைத்தார்கள் என்று நான் துணிந்து கூறுகிறேன். அவர்கள் அப்படிச் செய்யா விட்டாலும்கூட இந்தக் காலத்தில் சரீர உழைப்பு அவசியமென்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த சந்தர்ப்பத்தில் நான் டால்ஸ்டாயின் ஜீவியத்தை கவ னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அவரு டைய ருஷ்யா தேசத்தில் பொண்டாரப் என்று ஒரு குடியானவர் இருந்தார். அவர்தான் முதன் முதலாக உணவுக்காக ஒவ்வொருவரும் உழைத்துத்தீரவேண்டு மென்ற கொள்கையை கூறினர். அந்தக் கொள் கையை டால்ஸ்டாய் உலக முழுவதும் தெரியும்படி யாக செய்தார்.

மோ. க. காந்தி.

## சினிமாக்கள்

ஸ்ரீமதி ராமேஸ்வரி நேரு கீழ்க்கண்டவாறு எழுது கிருர்:—

"நமது தேசீய சர்க்கார் சினிமாக்களை நல்ல விதமாக நடத்த [illegible] செய்ய வேண்டும் என்று ஒரு நிருபர் ஹரிஜனுக்கு [illegible] எழுதி யிருந்ததைக் கண்டேன். நானும் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். [illegible]

நான் அடிக்கடி சினிமாவுக்குப் போகிறதில்லை. ஆயினும் சினிமாப் படங்களால் ஒழுக்கம் கெட்டு விடுகிறது என்று அந்த நிருபர் கூறியது முற்றிலும் உண்மை என்று கூறுவேன்.

சினிமாவுக்குப் போகும் வழக்கம் அதிக விரைவாக வளர்ந்து கொண்டு வருகிறது. அந்த வழக்கம் கிராமங்களிலும் பரவுவது அபாயகரமானதாகும். முன் காலத்தில் கதாகாலக்ஷேபங்கள் நடைபெற் றன. அவைகள் ஜனங்களுடைய ஒழுக்கத்தை பாது காத்து வந்தன. இப்பொழுது அவைகள் மறைந்து போய் அவைகளுக்குப் பதிலாகச் சினிமாப் படங்கள் தோன்றி யிருக்கின்றன. ஜனங்கள் அவைகளை நாளுக்கு நாள் அதிகமாக விரும்பி வரு கிருர்கள். ஒழுக்கத்திற் கேற்படும் இந்தப் பெரிய அபாயத்தைத் தடுப்பதற்கு வேண்டிய சகல காரியங் களையும் உடனே செய்ய வேண்டும். திரு. மஷ்ருவாலா சொல்வது போல இந்தப் படங்கள் தேசத்தின் ஒழுக்க முன்னேற்றப் பாதையில் பெரிய பாராங் கற்களாக இருந்து வருகின்றன. அவற்றை அகற்ற வேண்டுமானுல் அதிகப் பலம் பொருந்திய யானைகள் தேவையாகும். ஜனங்கள் தாங்களாகவே கவனித்துக் கொள்ளக் கூடிய அற்ப விஷயமன்று இது. பணம் தேடுவதையே நோக்கமாகக் கொண்டு லாபக் கருத்துடன் தொழில் நடத்தும் பெரிய முதலாளிகளே சினிமாப் படங்களை உற்பத்தி செய் கிருர்கள். அதனுல் தான் அபாயமுண்டாகிறது. விஞ்ஞானமானது நமக்கு ஒரு நல்ல சாதனத்தை அளித்தது. அது இப்பொழுது கெடுதல் செய்து வருகிறது. சர்க்கார் அதை ஜனங்களுடைய கல்விக் கும், பண்பாட்டு முன்னேற்றத்திற்கும் சிறந்த கருவியாகச் செய்ய முடியும்.

இப்பொழுது இந்தியாவில் மிகச் செழிப்பாக நடை பெறும் கைத்தொழில்களில் சினிமாத் தொழிலும் ஒன்று. எல்லாக் கைத்தொழில்களிலும் அதிக லாபம் தரக் கூடிய மலிவான பொருள்களைச் செய்து குவிப்பது போலவே இந்தக் கைத்தொழிலிலும் நடைபெறுகிறது. காம விஷயம் உள்ள படங் களுக்கே ஏராளமான ஜனங்கள் போகிருர்கள். சில மனிதர்கள் தங்கள் சொந்த லாபத்திற்காக ஜனங் களுடைய மனத்தைக் கெடுத்து வருகிருர்கள். ஜனங்கள் கேட்பதை இவர்கள் உற்பத்தி செய்ய வில்லை. இவர்கள் உற்பத்தி செய்து அதையே ஜனங்கள் விரும்பும்படி செய்கிருர்கள்.

கைத்தொழில்களை தேசிய மயமாக்க வேண்டு மென்று கூறி வருகிருர்கள். மற்றக் கைத்தொழில் களை தேசியம ஆக்குவதைவிட சினிமாக் கைத் தொழிலை தேசியமாக்குவது அதிக அவசியமாகும். அப்படிச் செய்யாவிட்டாலும் சர்க்கார் கடுமை யாகக் கண்காணித்து வருவது இன்றியமையாத தாகும்.

இப்பொழுதும் சர்க்கார் கண்காணித்து வரத்தான் செய்கிருர்கள். ஆனால் சினிமா தணிக்கை போர்டுகளை ஏற்படுத்தி யிருக்கிருர்கள். கொஞ்ச காலத்துக்கு முன் நான் பஞ்சாப் போர்டில் அங்கம் வகித்திருந்தேன். அப்பொழுது அன்னிய அரசாங்கம் நடந்து வந்தது. அந்த அரசாங்கத்தின் நன்மையை உத்தேசித்தே அந்த போர்டு தணிக் கையை நடத்தி வந்தது. தேச [illegible] பற்றியோ தேசத் தலைவர்களைப் [illegible] துவேஷ [illegible] நீக்கி விடப்பட்ட[illegible] விஷயத்தைப் பற்றிக் [illegible] படவில்லை. இந்த முறை[illegible] ராஜிநாமாச் செய்தேன். ஆனல் இப்பொழுது நம்முடைய அரசாங்கங்கள் ஏற்பட்டிருப்பதால் நாம் அலட்சியமா யிருப்பதற் கில்லை. அவைகள் சினிமாப் படங்களைக் கடுமை யாகக் கண்காணிக்கும்படிச் செய்ய வேண்டும். அதிலும் முக்கியமாக கல்வி இலாகா அதிகமான கவனம் செலுத்த வேண்டும்."

என் கருத்து:—தேசிய சர்க்காருடைய கடமையை நான் வற்புறுத்திச் சொல்லவில்லை என்று என்னைக் கண்டித்து இதுபோன்ற கடிதங்கள் வந்திருக்கின் றன. ஆதியில் எழுதிய நிருபர் மத்திய இந்தியாவைச் சேர்ந்தவர். அவரை ஆதரித்து எழுதியுள்ள கடிதங் கள் பஞ்சாப், குஜராத், மத்திய மாகாணம், சென்னை ஆகிய இடங்களிலிருந்து வந்திருக்கின்றன. ஆகவே சினிமாவைப் பற்றிய அதிருப்தி இந்தியா முழுவதி லும் ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

சர்க்கார் இது விஷயத்தில் செய்ய வேண்டியது எதுவுமில்லை என்று நான் சொல்லவில்லை. அறி வாளிக்கு ஒருவார்த்தை போதுமென்பது பழமொழி. அதனுல் நிருபர் கூறுவதில் உண்மை யிருக்கிறதென் றும் பொதுஜன சர்க்கார் அதைக் கவனிக்க வேண்டு மென்றும் மட்டும் சொல்லி நிறுத்தினேன். இப் பொழுது பம்பாய் சர்க்கார் சினிமாக்களைத் திருத்தி அமைப்பதற்காக சட்டம் செய்யப் போவதாகத் தெரிகிறது. மற்ற சர்க்கார்களும் அந்த விதமாக நடந்து கொள்வார்களென்று நம்புகிறேன்.

சர்க்காருடைய கடமையைக் கூறியபோதிலும் மறுபடியும் ஜனங்களுடைய கடமையை வற்புறுத்

மனிதரைச் சுதந்திரத்திற்குத் தகுதியாக்குவது சுதந்திரம் ஒன்றே—க்ளாட்ஸ்டன்.

திக் கூற விரும்புகின்றேன். ஜனங்களுடைய அபிப்பிராயத்தை உருவாக்குகிறவர்கள் சர்க்காரை எதிர்பார்ப்பதைவிடத் தாங்களே யாருக்கும் பயப்படாமல் தீமைகளை எடுத்துக்கூறி சீர்திருத்த முயல வேண்டும். சர்க்கார்மட்டும் தனியாக அதிகமாக எதுவும் செய்துவிட முடியாது.

கே. ஜி. மஷ்ருவாலா.

## குஷ்டரோக நிவாரண வேலை

"குஷ்டரோக நிவாரண வேலை செய்வது பெரிய தீரச் செயல் என்று எண்ணுகிறார்கள். ஆனால் டாக்டர்கள் சிகிச்சை செய்துவரும் மற்ற நோய்களைப் போன்றதே குஷ்டரோகமாகும். இதில் பெருமை பேசுவதற்கு யாதொன்றும் இல்லை."

டாக்டர் காக்கிரேன்.

டாக்டர்கள் குஷ்டநிவாரண வேலையை மேற்கொள்ளவேண்டுமென்று திரு விநோபா வேண்டுகோள் விடுத்திருப்பதை நான் நன்றியறிதலுடன் வரவேற்கிறேன். குஷ்ட நிவாரணை வேலைசெய்யும் பொழுது அது தொத்தி விடுமா என்னும் விஷயமாக கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை கூற விரும்புகிறேன். அமெரிக்க குஷ்டரோக நிவாரண சங்கத்தின் தலைவராகிய பெரி பர்க்கஸ் என்பவர் அந்த உண்மைகளை கீழ்க்கண்டவாறு சுருக்கிச் சொல்லுகிறார் :—

"உலகத்தில் பலபாகங்களில் குஷ்டநோய் காணப்பட்ட போதிலும் குஷ்ட நோய்களோடு ஆயிரக்கணக்கான டாக்டர்களும் நர்ஸுகளும் தொண்டர் தினம்தோறும் நெருங்கிப் பழகிய போதிலும் குஷ்டரோகம் தொத்திக் கொண்டது மிகக் குறைவேயாகும். மற்ற தொத்து நோய்கள் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய நியாயமான பாதுகாவல் ஏற்பாடுகளே குஷ்டரோகம் விஷயத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன."

குஷ்டரோகம் தொத்திக் கொண்டதாக உலகமெங்கும் தெரிந்தவர் டேமியன் பாதிரியார் ஆவார். ஆனால் அவருக்கு என்னென்ன காரணங்களினால் குஷ்டரோகம் தொத்திக் கொண்டது என்பது தெரியவில்லை. அமெரிக்காவில் சர்க்கார் சுகாதார இலாக்காவைச் சேர்ந்த டாக்டர் டென்னி என்பவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :

"டேமியன் பாதிரியார் குஷ்டரோகம் தொத்திக் கொள்ளாமல் இக்கும்படி ஜாக்கிரதையாக நடந்துகொள்ளாமல் குஷ்டரோகிகளுடன் சுகாதார குறைவான நிலைமையில் வாழ்ந்து வந்தார். குஷ்ட ரோகிகளே அவருக்கு உணவு சமைத்துக் கொடுத்தார்கள் துணிதுவைத்துக் கொடுத்தார்கள்."

டேமியன் பாதிரியார் இறந்த பிற்பாடு அவருடைய ஸ்தானத்திலிருந்து சேவை செய்து வந்த ஜோஸப் பட்டன் என்பவர் வைத்தியராய் இருந்தபடியால் குஷ்டரோகிகளிடையே 48 வருஷகாலம் வாழ்ந்து வந்த போதிலும் அவருக்கு அந்தநோய்தொத்தவில்லை. டேமியன் பாதிரியாருடன் சேவை செய்த பெண்களுக்கும் அந்த நோய் வரவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் சுகாதார விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்து வந்ததே யாகும். குஷ்டரோகம் தொத்து நோயாக இருந்தபோதிலும் உறவாடுவதால் மட்டும் தொத்திக் கொள்வதில்லை என்பதை அவர்களுடைய வாழ்வு நிரூபித்திருக்கிறது. டேமியன் பாதிரியார் வேலை செய்த இடத்தில் 78 வருஷ காலமாக குஷ்டரோக நிவாரண வேலை நடந்து வருகிறது. ஆயினும் டேமியன் பாதிரியாரைத் தவிர வேறு ஒருவருக்குத் தான் குஷ்டரோகம் தொத்திக்கொண்டது. அவருக்கு உடனே ஆப்பரேஷன் செய்து அதை நீக்கி விட்டார்கள். அதன் பிறகு அவர் ஜாக்கிரதையாக நடந்து வந்ததால் இப்பொழுது 72 வயதாகியும் அங்கே நல்ல சேவை செய்துகொண்டிருக்கிறார்.

உலகத்திலேயே மிகப் பெரிய குஷ்டரோக நிவாரண ஸ்தாபனம் பிலிப்பைன் தீவில் காசுயன் என்னுமிடத்தில் இருந்து வருகிறது. அது 1907-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. அங்கே நூற்றுக் கணக்கான டாக்டர்களும் நர்ஸுகளும் வேலை செய்கிறார்கள். அங்கே வேலை செய்பவர்களில் இருவருக்குத் தான் குஷ்டரோகம் தொத்திக்கொண்டது. அதுவும் ஆராய்ந்து பார்த்தபொழுது ஒருவருக்கு அங்கு வருவதற்கு முன்னதாகவே அது ஏற்பட்டிருந்ததாக தெரிய வந்தது.

மானில்லாவிலுள்ள டாக்டர் கர்ஜன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—"எங்கள் ஆஸ்பத்திரி 264 வருஷங்களுக்கு முன் ஏற்பட்டதாகும். ஆனால் இது வரைக்கும் குஷ்டரோகம் யாரையும் தொத்திக் கொள்ளவில்லை."

அமெரிக்காவில் நியூஆர்லியன்ஸ் என்னுமிடத்தில் ஒரு ஆஸ்பத்திரி நடந்து வந்தது. அங்கே வேலை செய்த டாக்டர்களுக்கும் நர்ஸுகளுக்கும் குஷ்டரோகம் தொத்திக்கொள்ளவில்லை. ஆனால் சிற்சில சமயங்களில் அங்கே போய் வந்த போகிலியாலி பாதிரியார்க்கு மட்டும் தொத்திக்கொண்டது. டாக்டர்கள் அவருக்கு முன் கூட்டியே குஷ்டரோகம் தொத்தியிருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள்.

மோரி ரீட் என்பவர் இந்தியாவில் ஏழுவருஷ காலம் சேவை செய்துவிட்டு அமெரிக்காவிற்கு திரும்பிச் சென்றார். அவர் இந்தியாவில் குஷ்டரோக ஆஸ்பத்திரியில் வேலை செய்யவில்லை. அப்படியிருந்தும் தமக்கு குஷ்டரோகம் இருப்பதாக அறிந்தார். பிறகு இந்தியாவிற்கு திரும்பி வந்து குஷ்டரோக ஆஸ்பத்திரியில் வேலை செய்தார். சிகிச்சை செய்யாமலே நோய் குணமாய்விட்டது, 86 வயது வரை வேலை செய்து கொண்டிருந்தார். அவருடைய ரோகம் மிகக் குறைந்ததாகவும் குணமாகக்கூடியதாகவும் இருந்திருக்கும் என்று டாக்டர் காக்ரேன் அபிப்பிராயப்படுகிறார்.

ஹாஸியானாவில் உள்ள ஆஸ்பத்திரி ஏற்பட்டு 52 வருஷங்கள் ஆகின்றன. ஆயினும் அங்கே வேலை செய்யும் டாக்டருக்கோ நர்ஸுக்கோ இது வரை நோய் ஏற்பட்டதில்லை. டாக்டரோ நர்ஸோ இல்லாத ஒருவருக்குத்தான் ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் அவரும் குஷ்டரோகம் பரவியிருந்த பிரதேசத்திலிருந்து வந்தவராகத் தெரிகிறது.

ஆகவேநோயாளிகளுடன்பழகும் டாக்டர்களுக்கோ நர்ஸுகளுக்கோ குஷ்டரோகம் தொத்தக்காணோம். போதுமான ஜாக்கிரதையுடன் நடந்துகொண்டால் குஷ்டரோகம் தொத்துவதில்லை. ஆதலால் குஷ்டரோக நிவாரண வேலையில் ஈடுபடுகிறவர்கள் தங்களை பெரிய தியாகிகளாக எண்ணிக் கொள்ள வேண்டிய அவசிய மில்லை.

குஷ்டரோகம் குழந்தைகளுக்குத் தவிர மற்றவர்களுக்கு எளிதில் தொத்திக் கொள்வதில்லை.

டி. என். ஜெகதீசன்

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரன் தெரு, ஜி. டி., சென்னை
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.